
இயல் ஐந்து

கல்வி

# கசடற மொழிதல்



## கற்றல் நோக்கங்கள்

- கல்வி, பெண்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளமையை உணர்ந்து பெண்கல்விக்குத் தம் பங்களிப்பை நல்குதல்
- பலவாறான இலக்கிய வடிவங்களின்வழி கருத்துகளைப் படித்து அறிதல்
- குறிப்பிட்ட தலைப்பின்கீழ் கருத்துகளைத் திரட்டிக் கோவையாக எழுதும் திறன் பெறுதல்
- நூலகத்தின் பயனறிந்து பயன்படுத்த முனைதல்
- இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றை எழுதுதலில் முறையாகப் பயன்படுத்துதல்



9th_Tamil_Pages 122-264.indd 123 23-01-2020 20:20:52

கல்வி

ரு

# கல்வியில் சிறந்த பெண்கள்

நுழையும்முன்

கையிலுள்ள செல்வத்தைக்காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான் ஒருவருக்கு வாழ்வின் இறுதிவரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்களுக்கு அழகு. சங்ககாலத்தில் உயர்ந்திருந்த பெண்கல்வி, இடைக்காலத்தில் ஒடுங்கிப்போனது. பெண்கல்வியை மீட்டெடுக்க உலகம் முழுவதும் சான்றோர் பலர் பாடுபட்டிருக்கின்றனர். மருத்துவர் முத்துலட்சுமி முதல் மலாலா வரை சாதனைப் பெண்கள் ஒவ்வொருவரின் வரலாற்றிலும் ஒரு சோதனைக் காலமும் ஒரு வேதனை முகமும் இருக்கின்றது. இனி, பெண்கல்வி காலூன்றிக் கடந்து வந்த பாதைகளில் நடந்து செல்லும் வில்லிசையைச் செவிமடுப்போம்.

**வில்லுப்பாட்டு**

**பங்கு பெறுவோர்**

**வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர், குழுவினர்**

KAFFNJ

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்: *தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட*

குழுவினர்:
*ஆமாம், வில்லினில் பாட*

குழுத்தலைவர்:
*வந்தருள்வாய் தமிழ்மகளே!*

குழுவினர்: *ஆமாம், வந்தருள்வாய் தமிழ்மகளே!*

அண்ணே, என்னண்ணே, இன்னைக்கு எதைப் பத்திப் பாடப்போறோம்?

குழுத்தலைவர்: *நாடும் தாய்தான் நகரும் நதியும் தாய்தான் ... மொழியும் தாய்தான் சுழலும் புவியும் தாய்தான்*

குழுவினர்: பீடிகை போடாம செய்திக்கு வாங்கண்ணே!



குழுத்தலைவர்: இப்படி எல்லாத்தையும் பெண்ணாகப் பார்த்து வணங்கற நாம எல்லாரும், வீட்டில் இருக்கும் பெண்ணை மதிக்கிறோமா?

குழுவினர்: அண்ணே... மதிக்க என்ன இருக்கு. எல்லார் வீட்டிலயும் இப்படித்தானே?

குழுத்தலைவர்: சரி, இதுவே ஒரு பெண் ஆட்சியர் வந்தா என்ன செய்வ?



9th_Tamil_Pages 122-264.indd 124 23-01-2020 20:20:52

குழுவினர்: என்ன அண்ணே கேள்வி இது? உடனே எழுந்து நின்று வணக்கம் சொல்வேன்.

குழுத்தலைவர்: அப்போ, ஒரு பெண் படிச்சுப் பெரிய பதவிக்கு வரும்போது, தானா மரியாதை வருதுல்ல? அதான், இன்னிக்குப் பெண் கல்வியின் அவசியம் பத்தியும் கல்வியில் சிறந்த பெண்களைப் பத்தியும் பாடப்போறோம்.

*படிக்க வேண்டும் பெண்ணே – அப்பத்தான்*
*பார்முழுதும் போற்றிடும் கண்ணே . . .*
*சுயமாகச் சிந்திக்கத் துணையாகும் கல்வி*
*சொந்தக்காலில் நின்றிடவே உடனுதவும் கல்வி...(படிக்க)*

குழுவினர்: ஆமா, பார் முழுதும் போற்றிடும் கண்ணே.

ஆமாண்ணே, எனக்கொரு சின்ன ஐயம். அந்தக் காலத்தில எந்தப் பெண்ணைப் படிக்க வச்சாங்க? அப்பல்லாம் நாடு நல்லா இல்லையாண்ணே!

குழுத்தலைவர்: தம்பி, உனக்கு விவரம் பத்தாது. சொல்றேன் கேட்டுக்கோ.

*கற்காலம் முதலே கனிந்திருந்த தமிழின்*
*பொற்காலம் எனவே புகழப்படும் காலம்*
*எக்காலம்? அது எக்காலம்?*
*பாட்டும் தொகையும் உருவான காலம்*
*ஊட்டும் தமிழுணர்வு உயர்ந்திருந்த காலம்*
*சங்ககாலம்... அது சங்ககாலம்...*
*ஔவையும் குயத்தியும் வெறிபாடிய கண்ணியும்*
*கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடிய மாசாத்தியும்*
*செழித்திருந்த காலம்... புகழ் வளர்த்திருந்த காலம்...*

குழுவினர்: ஓகோ! சங்க காலத்தில் பெண்பாற் புலவர் பலர் இருந்ததச் சொல்றீங்களா அண்ணே, மேலே சொல்லுங்க. நானும் தெரிஞ்சுக்கணும். நம்ம மக்களும் தெரிஞ்சு நடந்துக்கட்டும்

### தெரிந்து தெளிவோம்

**சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்**

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்:

*பெண்பாற் புலவர்கள் வந்தாங்க...*
*பெண்ணுணர்வைப் பாடலில் தந்தாங்க...*
*தூது போனாங்க... துயரைத் தீர்த்தாங்க...*
*ஓதும் தமிழாலே உயர்வைப் பெற்றாங்க...*

குழுவினர்: படிச்ச பெண்களுக்குக் கிடைச்ச பெருமையை இன்னும் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்: சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்திலே, மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாக இருந்தாங்க.

குழுவினர்: அப்படியா அண்ணே, வேற யாரெல்லாம் படிச்சுப் பெருமை அடைஞ்சாங்க?

குழுத்தலைவர்: பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள், தம் இறைவனுக்குப் பாமாலை சூட்டினாங்க.

குழுவினர்: ஆமாண்ணே நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, திரும்பவும் எனக்கொரு ஐயம். இவ்வளவு பெண்கள் படிச்சிருந்த நம்ம நாட்டில சில நூற்றாண்டுகளா ஏன் பெண்ணடிமைத்தனம் வந்துச்சு?

குழுத்தலைவர்: தம்பி நல்ல கேள்வி கேட்ட, சொல்றேன் கேளு.



9th_Tamil_Pages 122-264.indd 125 23-01-2020 20:20:52

*ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பிலே*
*சமம் என்று நினைச்சாங்க – முன்னோர்கள்*
*சரியாக வாழ்ந்தாங்க…*
*இடையில் குடிபுகுந்த மூடப்பழக்கங்களால்*
*பெண்களைத் தாழ்த்தினாங்க – சமத்துவத்தை*
*அடியோடு வீழ்த்தினாங்க…*

குழுவினர்: அது சரிண்ணே, இன்று பெண்கள் நல்லாப் படிச்சு உயர்ந்த பதவியெல்லாம் பெற்று நாட்டையே ஆளறாங்க. இந்த நிலை எப்படிண்ணே வந்தது?

குழுத்தலைவர்: அது, ஒரு நூற்றாண்டு கால வரலாறு தம்பி. இந்த நிலையை அடைய அவங்க பட்டபாடு சொல்லி முடியாது.

குழுவினர்: அதைத்தான், கேட்கறேன் விரிவாகச் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்:

*அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதுக்கு என்று*
*ஆணவமாக் கேட்டவங்க மத்தியிலே*

குழுவினர்: *ஆமா மத்தியிலே*

குழுத்தலைவர்: தமிழகத்தின் முதல் பெண் மருத்துவராய், சாதனை படைச்சாங்க முத்துலெட்சுமி

குழுவினர்: ஆமா! முத்துலெட்சுமி அடடா! என்ன அருமையான செய்தி. அவங்க வேற என்னெல்லாம் செய்தாங்கண்ணே?

குழுத்தலைவர்:

*பொதுச்சேவைக்கு வந்தாங்க புதுமையைப் படைச்சாங்க*
*சட்டசபை உறுப்பினராய்ச் சரித்திரமாய் நின்னாங்க*
*மகளிருக்கெதிரான கொடுமைகளை மாண்புடனே எதிர்த்தாங்க*
*மனிதகுலத்தின் மாணிக்கமாய் மக்கள்மனங்களில் நிறைந்தாங்க*

**பெண்மை – புரட்சி**



**முத்துலெட்சுமி**
**(1886 – 1968)**

**தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்**

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

குழுவினர்: என்ன இருந்தாலும் படிச்சவங்க படிச்சவங்கதான்.

குழுத்தலைவர்: அவங்களைப் போலவே மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் நல்லா படிச்சவங்க. சமூக சேவகியா இருந்து பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டாங்க.

குழுவினர்: இன்னும் வேறு யாரெல்லாம் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டாங்க அண்ணே?

குழுத்தலைவர்: சொல்றேன் கேளு தம்பி …

*முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர் யாரு…*
*தந்தை பெரியாரு*
*விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் யாரு…*
*நம்ம பாரதியாரு …*
*பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோவென*



9th_Tamil_Pages 122-264.indd 126 23-01-2020 20:20:52

*இடிமுழக்கம் செய்தவர் யாரு…*

*பாரதிதாசனாரு …*

குழுவினர்: இவ்வளவு சேதி கேட்ட நாங்க, பெண் கல்விக்காக நமது அரசாங்கம் என்னென்ன செய்தது என்பதையே கேட்க மறந்து விட்டோம் அண்ணே!

குழுத்தலைவர்: பெண்கல்வி மேம்பாட்டிற்குத் தற்போதைய அரசு மட்டுமல்ல, ஆங்கில அரசே சட்டங்கள் போட்டது தம்பி.

குழுவினர்: என்னண்ணே சொல்றீங்க! நம்ப முடியல. ஆங்கில அரசு சட்டம் போட்டதா? புரியும்படி சொல்லுங்க!

குழுத்தலைவர்: தம்பி 1882இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினாங்க.

குழுவினர்: இது புதிய செய்தியா இருக்கே!

குழுத்தலைவர் : அதன் பிறகு, பெண்கள் கல்வி பயில, பல உயர்கல்வி நிறுவனங்களை அரசு உருவாக்குச்சு.

**பெண்மை – துணிவு**

**மூவலூர் இராமாமிர்தம் (1883 – 1962)**



தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு, 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

**பெண்மை – உயர்வு**

**பண்டித ரமாபாய் (1858 – 1922)**



இவர் சமூகத் தொண்டர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

குழுவினர்: ஆங்கில அரசு பத்திச் சொன்னீங்க சரி, விடுதலைக்குப் பின் நமது மத்திய, மாநில அரசுகள் பெண் கல்விக்காக என்ன செய்தன அண்ணே!

குழுத்தலைவர்: அதைச் சொல்லாம விடுவேனா தம்பி?

*கற்க வேண்டும் பெண்கள் என்று முழங்கியது அரசாங்கம்*

*கற்பதனாலேயே நம்நாட்டின் நிலையோங்கும்*

*பெண்கள் பள்ளிக்கூடங்கள் திறந்தார்கள்*

*பெண்களும் கல்வி கற்று உயர்ந்தார்கள்….*

குழுவினர்: நமது தமிழக அரசு நல்ல திட்டங்களையே தந்திருக்குது அண்ணே.

**பெண்மை – சிறப்பு**



**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (1870–1960)**

பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில், தமிழகத்திற்கு வந்து, மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.



9th_Tamil_Pages 122-264.indd 127 23-01-2020 20:20:52

குழுத்தலைவர்: ஆமா ஆமா. அரசுத் திட்டங்கள் மட்டுமல்ல; தனிமனிதப் பங்களிப்பும் இருக்கு தம்பி. இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி, இதுவரைக்கும் 80ஆயிரம் குழந்தைகள் கல்விபெற உதவியா ஒருத்தர் இருந்திருக்காரு.

குழுவினர்: அப்படிப்பட்ட பெருமைக்குரியவர் யாரு அண்ணே?

குழுத்தலைவர்: 2014இல் நோபல் பரிசு வாங்கின பெருமைக்குரியவரு. அவர்தான் நம்ம கைலாஷ் சத்யார்த்தி.

குழுவினர்: எவ்வளவோ செய்திகளை இன்னைக்குச் சொன்னீங்க, இன்னும் ஏதாவது?...

குழுத்தலைவர்: ஏன் தம்பி! இழுக்கற. சொல்றேன் கேளு! பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி மலாலா "நோபல் பரிசு" வாங்கினாங்க தெரியுமோ!

குழுவினர்: ஆமாண்ணே நான் கூடக் கேள்விப்பட்டேன்.

குழுத்தலைவர்: இவ்வளவு நேரம் என்னுடைய வில்லுப்பாட்டால என்ன தெரிஞ்சுக்கிட்ட தம்பி. மக்களுக்குச் சுருக்கமாகச் சொல்லு!



### யார் இவர்?

பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).



### பெண்மை – அறிவு

**சாவித்திரிபாய் பூலே (1831 – 1897)**



1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

குழுவினர் :

*பெண்கள் படிக்கணும் நாட்டின் கண்கள் திறக்கணும்*
*இன்னும் படிக்கணும் உயர்வு என்றும் விளையணும்*
*ஆணும் பெண்ணும் சரிநிகரென்னும் அறிவு வளரணும்*
*அன்பினாலே அகிலம் பூக்கும் உண்மை புரியணும்... (பெண்கள்)*

குழுத்தலைவர்: பரவாயில்லை நல்லாவே புரிஞ்சுக்கிட்ட தம்பி. இத்தனை போரட்டங்களுக்குப் பிறகுதான் இன்று பெண்கள் அதிகமாகக் கல்வி கற்க வாராங்க. உயர்கல்வி கற்று எல்லாத் துறைகளிலும் பணியாற்றித் திறமையாகச் செயல்படுறாங்க.

குழுவினர்: அடடே! இது எவ்வளவு பெரிய சேதி அண்ணே! என்னண்ணே...நீங்க சொன்னதைக் கேட்டுக்கிட்டே இருந்ததாலே நேரம் போனதே தெரியல.

குழுத்தலைவர்: சரி சரி. அப்படின்னா மங்களம் பாடிடுவோம்!

அனைவரும்:

*வாழியவே பெண்மை வாழியவே*
*வளமான பெண்கல்வி வாழியவே*
*சமத்துவம் வாழியவே*
*புவி வளம் பெறவே*
*புதிய உலகம் நலம்பெறவே*
*(வாழியவே பெண்மை வாழியவே)*



9th_Tamil_Pages 122-264.indd 128 23-01-2020 20:20:53

## தெரிந்து தெளிவோம்

### பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்

ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. காண்க: tavikaspedia.in

### தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்–தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

### கோத்தாரி கல்விக் குழு

1964ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

### சாரதா சட்டம்

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

### ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் (1906 –1955)

தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## கற்பவை கற்றபின்...

1. *இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.*
2. *கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.*

### தொடர்கள்

KAPBQ7

- *கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு*
- *கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி*
- *கல்வி கரையில கற்பவர் நாள்சில*
- *கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு*
- *கல்வியழகே அழகு*

### பொன்மொழிகள்

- *கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்.*
- *எடுத்தால் குறைவது செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி.*
- *கல்வி ஓர் அணிகலன். அணிந்தால் அழகு தரும், அணிவித்தால் சிறப்பினைத் தரும்.*



9th_Tamil_Pages 122-264.indd 129 23-01-2020 20:20:53

கவிதைப் பேழை

# கல்வி

ரு

# குடும்ப விளக்கு

–பாரதிதாசன்

KAY7RU

**நுழையும்முன்**

புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டுதல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பவிளக்கு.

1. *கல்வி இல்லாத பெண்கள்*
*களர்நிலம் அந்நி லத்தில்*
*புல்விளைந் திடலாம் நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை*
*கல்வியை உடைய பெண்கள்*
*திருந்திய கழனி அங்கே*
*நல்லறிவு உடைய மக்கள்*
*விளைவது நவில வோநான்!*

சொல்லும் பொருளும்:

களர்நிலம் – பண்படாத நிலம்,
நவிலல் – சொல்லல்.

2. *வானூர்தி செலுத்தல் வைய*
*மாக்கடல் முழுது மளத்தல்*
*ஆனஎச் செயலும் ஆண்பெண்*
*அனைவர்க்கும் பொதுவே! இன்று*
*நானிலம் ஆட வர்கள்*
*ஆணையால் நலிவு அடைந்து*
*போனதால் பெண்களுக்கு*
*விடுதலை போனது அன்றோ!*

சொல்லும் பொருளும்:

வையம் – உலகம்;
மாக்கடல் – பெரிய கடல்,



3. *இந்நாளில் பெண்கட்கு எல்லாம்*
*ஏற்பட்ட பணியை நன்கு*
*பொன்னேபோல் ஒருகை யாலும்*
*விடுதலை பூணும் செய்கை*
*இன்னொரு மலர்க்கை யாலும்*
*இயற்றுக! கல்வி இல்லா*
*மின்னாளை வாழ்வில் என்றும்*
*மின்னாள் என்றே உரைப்பேன்!*



9th_Tamil_Pages 122-264.indd 130 23-01-2020 20:20:53

**சொல்லும் பொருளும்:** இயற்றுக – செய்க; மின்னாளை – மின்னலைப் போன்றவளை; மின்னாள் – ஒளிரமாட்டாள்.

4. *சமைப்பதும் வீட்டு வேலை*
*சலிப்பின்றிச் செயலும் பெண்கள்*
*தமக்கே ஆம் என்று கூறல்*
*சரியில்லை; ஆடவர்கள்*
*நமக்கும் அப் பணிகள் ஏற்கும்*
*என்றெண்ணும் நன்னாள் காண்போம் !*
*சமைப்பது தாழ்வா ? இன்பம்*
*சமைக்கின்றார் சமையல் செய்வார்!*

5. *உணவினை ஆக்கல் மக்கட்கு!*
*உயிர்ஆக்கல் அன்றோ? வாழ்வு*
*பணத்தினால் அன்று! வில்வாள்*
*படையினால் காண்ப தன்று!*
*தணலினை அடுப்பில் இட்டுத்*
*தாழியில் சுவையை இட்டே*
*அணித்திருந் திட்டார் உள்ளத்(து)*
*அன்பிட்ட உணவால் வாழ்வோம்!*

**சொல்லும் பொருளும்:** தணல் – நெருப்பு; தாழி – சமைக்கும் கலன்; அணித்து – அருகில்.

6. *சமைப்பது பெண்க ளுக்குத்*
*தவிர்க்கஒணாக் கடமை என்றும்*
*சமைத்திடும் தொழிலோ, நல்ல*
*தாய்மார்க்கே தக்கது என்றும்*
*தமிழ்த்திரு நாடு தன்னில்*
*இருக்குமோர் சட்டந் தன்னை*
*இமைப் போதில் நீக்கவேண்டில்*
*பெண்கல்வி வேண்டும் யாண்டும்!*

**சொல்லும் பொருளும்:** தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத; யாண்டும் – எப்பொழுதும்.

### பாடலின் பொருள்

1. கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல கல்வி அறிவிலாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

2. வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

3. இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

4. சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

5. உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் நெருப்பு மூட்டி சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

6. சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.



9th_Tamil_Pages 122-264.indd 131 23-01-2020 20:20:53

### இலக்கணக்குறிப்பு

மாக்கடல் – உரிச்சொல்தொடர்;

ஆக்கல் – தொழில்பெயர்;

பொன்னேபோல் – உவம உருபு;
மலர்க்கை – உவமைத்தொகை;

வில்வாள் – உம்மைத்தொகை;

தவிர்க்கஒணா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

### பகுபத உறுப்பிலக்கணம்

விளைவது = விளை + வ் +அ + து

விளை – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; அ – சாரியை; து – தொழிற்பெயர் விகுதி.

சமைக்கின்றார் = சமை + க் + கின்று + ஆர்

சமை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

### நூல் வெளி

குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்...

1. *பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்* – *பாரதி*

*மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்*
*செய்திடல் வேண்டுமம்மா....* – *கவிமணி*

*பெண்ணெனில் பேதை என்ற எண்ணம்*
*இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்*
*உருப்படல் என்பது சரிப்படாது* – *பாவேந்தர்*

*இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.*

KB83TH

2. *ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.*

கவிதைப் பேழை


# கல்வி

ரு

# சிறுபஞ்சமூலம்

–காரியாசான்

KBGYV5




மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை.

### அறிவுடையார் தாமே உணர்வர்

*பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,*
*மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,*
*விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு*
*உரையாமை செல்லும் உணர்வு*.* (பா. எண்: 22)



### பாடலின் பொருள்

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

**அணி :** பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

### சொல்லும் பொருளும்

மூவாது – முதுமை அடையாமல்; நாறுவ – முளைப்ப, தாவா – கெடாதிருத்தல்

### இலக்கணக் குறிப்பு

அறிவார், வல்லார்– வினையாலணையும் பெயர்கள்

விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

தாவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

### பகுபத உறுப்பிலக்கணம்

உரையாமை = உரை + ய் + ஆ + மை

உரை – பகுதி; ய் – சந்தி (உடம்படுமெய்)

ஆ – எதிர்மறை இடைநிலை

மை – தொழிற்பெயர் விகுதி

காய்க்கும் = காய் + க் + க் + உம்

காய் – பகுதி; க் – சந்தி; க் – எதிர்கால இடைநிலை; உம் – பெயரெச்ச விகுதி



9th_Tamil_Pages 122-264.indd 133 23-01-2020 20:20:53

## நூல் வெளி



தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

## தெரிந்து தெளிவோம் — சாதனைக்கு வயது தடையன்று

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.

11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.

15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.

17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் கலீலியோ.



## தெரியுமா?

சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

## கற்பவை கற்றபின்...

1. *பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.*
2. *மூவாது மூத்தவர், காணாது கண்டவர்*
   *இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.*



9th_Tamil_Pages 122-264.indd 134 23-01-2020 20:20:53

விரிவானம்

# கல்வி

ரு

# வீட்டிற்கோர் புத்தகசாலை

KBZQYF

நுழையும்முன்

"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்பார் ஆபிரகாம் லிங்கன். மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று, நூல்களும்தான். உலகமெங்கும் பயணம் செல்லும் பட்டறிவை நூலுலகம் தருகிறது. நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். இசையைப் போன்றே இதயத்தைப் பண்படுத்துவன நூல்களே. ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை என்றும் தேவை. இதை வலியுறுத்தும் வகையில் அறிஞர் அண்ணாவின் வானொலி உரை இடம்பெறுகிறது.



உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஓர் காரணத்தால் நேரிடும் ஏதோ ஓர் சம்பவம், உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். உலகத் தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்துகொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம்.

நாட்டுநிலை, உலகநிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டுநிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்லநிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலை கண்டு, நதி கண்டு, மாநிதி கண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே. மாநிலம் மதிக்கும் மனவளம் வேண்டும்.

எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா?



9th_Tamil_Pages 122-264.indd 135 23-01-2020 20:20:54

அவர்களின் வீடுகளாவது நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துகள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆகவேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டுநிலை கண்டு உலகம் மதிக்கவேண்டுமானால், இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமாக மனவளத்தைப் பெறமுடியும். நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன.

அவர்களின் காலம் அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம்; மனவளத்தை அதிகப்படுத்தும் மார்க்கம் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

இதோ நான் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள். இந்த ஒலி கேட்பது அறிவின் துணைகொண்டு.



விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வதிசயச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள் நமது முன்னோர்கள் காலம். இவ்வளவு வசதிகள் நமக்கிருக்கிறது. ஏன், மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மனவளத்தை அதிகரிக்கவோ பாதுகாக்கவோ நாம் முயற்சி செய்வதில்லை; வழிவகை தேடிக் கொள்வதில்லை.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச்செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூடப் புத்தகசாலை இராது.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை–அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழிசெய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்கூட



**தெரியுமா?**

2009ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

**இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில**

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
6. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
7. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
8. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
9. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

*அல்ல, அடிப்படை உண்மைகளாவது அறிவிக்கும்* நூல்கள் *சிலவாவது வேண்டும்.*

*வீடுகளிலே நடைபெறும் விஷேசங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக்கொண்டால், சுலபத்தில் ஒரு* சிறு புத்தகசாலையை *அமைத்துவிடலாம். உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்.*

*பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட,* வீட்டிற்கோர் திருக்குறள் *கட்டாயமாக இருக்கவேண்டும்.*

*நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கியச் சாரத்தைச் சாமானியரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும்.*

*நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின்* வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் *இருக்க வேண்டும்.*

*இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக்கொண்டால், நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை. கேட்டினை நீக்கிட, தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும்,* வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

**நூலகப் பயன்பாட்டிற்கான இணையத்தளங்கள்**

*http:www.tamilvu.org,http:www.thamizham.net,www.projectmadurai.com*

## நூல் வெளி

வீட்டிற்கோர் புத்தகசாலை என்னும் இப்பகுதி பேரறிஞர் அண்ணாவின் வானொலி உரைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிடச் சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே. 1935இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்

அண்ணாவின்சிறுகதைத் திறன் – ப.373 – முனைவர் பெ. குமார்.

## தெரிந்து தெளிவோம்

### புகழுக்குரிய நூலகம்

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது, திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.

உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

## கற்பவை கற்றபின்...

1. *வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்! – அறிஞர் அண்ணா*

   *உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! – கதே*

   *இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.*

KC9M13

2. *சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.*

3. *நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.*



9th_Tamil_Pages 122-264.indd 138 23-01-2020 20:20:55

கற்கண்டு

கல்வி ரு

# இடைச்சொல் – உரிச்சொல்

சுசீலா, அவளுடைய தோழி கமீலாவின் வீட்டுக்குப் போனாள். கமீலாவும் சுல்தானும் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுல்தானைவிடக் கமீலா இரண்டு ஆண்டுகள் பெரியவள். ஆனால் உருவத்தில் சுல்தான்தான் அண்ணனைப் போல இருப்பான். சுசீலாவைக் கண்டவுடன் கமீலா மகிழ்ச்சியடைந்தாள்.

KCII2Q



மேற்கண்ட பகுதியில் இடைச் சொற்களை இனம் காண முடிகிறதா?

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.

பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

இடைச்சொல் பலவகையாக அமையும்.

### இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று,... |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்,... |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை |
| வியங்கோள் விகுதிகள் | க, இய |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்,... |
| உவம உருபுகள் | போல, மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்,... |



9th_Tamil_Pages 122-264.indd 139 23-01-2020 20:20:55

## இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### உம்

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

### ஓ

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை - அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

• இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)

• பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)

• பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை - அதுவும் இல்லை)

### ஏ

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

### தான்

'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள். (தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் – பெயர்ச்சொல்)

### மட்டும்

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

### ஆவது

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

• ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)

• அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது, ... (வரிசைப்படுத்தல்)

### கூட

• என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)

• தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப் பொருள்)

• அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

### ஆ

வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.

ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

### ஆம்

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

### தெரிந்து தெளிவோம்

அன்று என்பது ஒருமைக்கும்

அல்ல என்பது பன்மைக்கும் உரியன.

(எ.கா.) இது பழம் அன்று.

இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

## உரிச்சொற்கள்

உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் **இசை, குறிப்பு, பண்பு** என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| கடி மலர் – மணம் மிக்க மலர்<br>கடி நகர் – காவல் மிக்க நகர்<br>கடி விடுதும் – விரைவாக விடுவோம்<br>கடி நுனி – கூர்மையான நுனி | ஒரு சொல் பல பொருளுக்கு உரியது |
| உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.<br>உறு பசி; தவச் சிறிது; நனி நன்று | பல சொல் ஒரு பொருள் |

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

## கற்பவை கற்றபின்...

1) பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

KCSE4D

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

2) உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

3) பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.

அ) மணற்கேணி__ ப்போல் விளங்கும் நூல்__ உறுதுணை__ இருக்கிறது.

ஆ) பெண்கள்__ ப்படிக்க வைக்காத காலத்தில்__ பெண் இனம்__ பெருமை சேர்க்கும்படி__ நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர்__ வந்தார்கள்.

இ) மக்கள்__ மனம்___ உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.



9th_Tamil_Pages 122-264.indd 142 23-01-2020 20:20:55

4) பொருத்தமாக இணைத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| அவன் | தான்<br>உம்<br>ஏ<br>ஆ | மனிதன் |
| இயற்கை | | அழகு |

| | | |
|---|---|---|
| உனக்கு | மட்டும்<br>கூட<br>ஆவது | தெரியுமா? |
| | | தெரியும் |

| | | |
|---|---|---|
| வீடு, நாடு | உம்<br>ஓ | நமதே |
| காற்று, வெளிச்சம் | | தேவை |
| அன்பு, அமைதி | | வேண்டும் |
| கபிலர் பரணர் | | வாருங்கள் |

5) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) _________ பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) ________ விடுதும் (உறு, கடி)

இ) ________ நுதல் (வாள், தவ)

ஈ) _________ சிறந்தது ( சால, மழ)

உ) _________ மனை ( கடி, தட)

**சிந்தனை வினா**

1) "தான்" என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

2) அவர்களுக்குப் பரிசு தருவேன் – இத்தொடரில் "ஆ" என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.

3) செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?

4) தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.

5) 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.

6) இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.

அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?

ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண்,பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?

உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.

ஊ) வாளால் வெட்டினான்.



9th_Tamil_Pages 122-264.indd 143 23-01-2020 20:20:55

# மதிப்பீடு

KD2A61

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) சிறுபஞ்சமூலம் | – | 1. காப்பிய இலக்கியம் |
| ஆ) குடும்ப விளக்கு | – | 2. சங்க இலக்கியம் |
| இ) சீவகசிந்தாமணி | – | 3. அற இலக்கியம் |
| ஈ) குறுந்தொகை | – | 4. தற்கால இலக்கியம். |

(க) அ–3, ஆ– 4, இ –1, ஈ– 2 (உ) அ– 2, ஆ– 3, இ– 1, ஈ– 4

(ங) அ– 3, ஆ–1, இ– 4. ஈ –2 (ச) அ– 4, ஆ –1, இ – 2, ஈ– 3

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| அ) | கலைக்கூடம் | ஆ) | கடி |
| | திரையரங்கம் | | உறு |
| | ஆடுகளம் | | கூர் |
| | அருங்காட்சியகம் | | கழி |
| இ) | வினவினான் | ஈ) | இன் |
| | செப்பினான் | | கூட |
| | உரைத்தான் | | கிறு |
| | பகன்றான் | | அம்பு |

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.



9th_Tamil_Pages 122-264.indd 144 23-01-2020 20:20:56

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

1. ஆ, இ சரி; அ தவறு
2. அ, இ, சரி; ஆ தவறு
3. மூன்றும் சரி
4. மூன்றும் தவறு

5. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை

ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை

ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

## குறுவினா

1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
2. மூவாது மூத்தவர், நூல் வல்லார்- இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
3. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?
4. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

## சிறுவினா

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
2. சமைப்பது தாழ்வா? இன்பம்
   சமைக்கின்றார் சமையல் செய்வார்.

   அ) இன்பம் சமைப்பவர் யார்?

   ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?
3. விதைக்காமலே முளைக்கும் விதைகள் -இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
4. இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.
5. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
6. நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.

## நெடுவினா

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
2. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
3. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

## மொழியை ஆள்வோம்

### ஒப்பிட்டுச் சுவைப்போம்.

| பாப்பா பாட்டு | Child's Song |
|---|---|
| ஓடி விளையாடு பாப்பா, – நீ<br>ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,<br>கூடி விளையாடு பாப்பா, – ஒரு<br>குழந்தையை வையாதே பாப்பா. | *Run about and play my sweet little Child*<br>*And idle not sweet little child;*<br>*In game and sport have many mates*<br>*And revile not any one child.* |
| காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு<br>கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு<br>மாலை முழுதும் விளையாட்டு – என்று<br>வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா. | *Rise at dawn to learn your lesson,*<br>*Then sing such airs that are soothing,*<br>*To games devote the whole evening,*<br>*Get habituated thus, oh child!* |

### மொழிபெயர்க்க.

*Akbar said, "How many crows are there in this city?"*

*Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".*

*"How can you be so sure?" asked Akbar.*

*Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".*

*Akbar was pleased very much by Birbal's wit.*

### பிழை நீக்கி எழுதுக.

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
3. பவளவிழிதான் பரிசு உரியவள்.
4. துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. குழலியும் பாடத் தெரியும்.

### இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா.) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
3. பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.
4. கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

## விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

### புத்தகத் திருவிழா

நாள் - செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

நேரம் - காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)

**அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!**

## நிகழ்வினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

**அண்ணாவின் வாழ்க்கையில்...**

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே சோதனை செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று," தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் " என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், " இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள் "என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, " நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப்போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும் . அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

1. மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?
2. அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?
3. அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?
4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.
5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

## மொழியோடு விளையாடு

**சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக**

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர் | பாடவேளை | கரும்பலகை |
| புத்தகம் | எழுதுகோல் | அழிப்பான் | வழிபாட்டுக் கூட்டம் |
| அறை | கல்லூரி | உயர்நிலை | சீருடை |
| மடிக்கணினி | | | |

*எ. கா. வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.*

**அகராதியில் காண்க.**

*அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்*

**படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**


*(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர்தண்ணீர்)*

1. *நா. காமராசனின் கவிதை நூல் ...*




..........................................................................................

2. *திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்.*



..........................................................................................

4. *நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்*



..........................................................................................

5. *சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற சிற்பியின் கவிதை நூல்*



..........................................................................................



9th_Tamil_Pages 122-264.indd 148 23-01-2020 20:20:56

6. எஸ். ராமகிருஷ்ணனின் சிறார் நாவல்.





..........................................................

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



..........................................................

..........................................................

..........................................................

..........................................................

..........................................................

### கடிதம் எழுதுக.

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்- தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

## செயல்திட்டம்

பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பற்றிய செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

## நிற்க அதற்குத் தக

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.

   எவரையும் காயப்படுத்தாமல் நடந்துகொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.

2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.

   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு.

### கலைச்சொல் அறிவோம்

சமூக சீர்திருத்தவாதி – Social Reformer

தன்னார்வலர் – Volunteer

களர்நிலம் – Saline Soil

சொற்றொடர் – Sentence

## அறிவை விரிவு செய்

ஒய்ந்திருக்கலாகாது – கல்விச் சிறுகதைகள் (தொகுப்பு: அரசி –ஆதிவள்ளியப்பன்)

முதல் ஆசிரியர் – சிங்கிஸ் ஐத்மாத்தவ்

கல்வியில் நாடகம் – பிரளயன்

மலாலா – கரும்பலகை யுத்தம்



9th_Tamil_Pages 122-264.indd 149 23-01-2020 20:20:56

## இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/d051/d0514/html/d05142l5.htm
http://tamilvu.org/courses/degree/a051/a0514/html/a051435.htm
http://www.annavinpadaippugal.info/sorpozhivugal/delhiyil_muthal_muzhakkam_1.htm
http://www.tamilvu.org/courses/degree/a021/a0213.pdf
http://www.tamilvu.org/courses/degree/a051/a0512/html/a0512315.htm

## இணையச் செயல்பாடுகள்


### Pongutamil


சிதறியதைச் சேகரிப்போமா!




படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி pongutamil என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் மேகங்களுக்கு மத்தியில் பூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கும் . அதில் முதலாவதைத் தெரிவு செய்துகொள்ளவும்.
- திரையின் பின் மெலிதாய்த் தோன்றும் படத்தின் மேல் சிதறிக் கிடக்கும் படங்களை ஒன்று சேர்த்து உண்மையான வடிவத்தை உருவாக்குக.
- எடுத்துக்காட்டாகத் தமிழரின் நீர் மேலாண்மையை உணர்த்தும் கல்லணைப் படத்தை ஒன்று சேர்க்க .





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.EL4.PonguTamil



9th_Tamil_Pages 122-264.indd 150
23-01-2020 20:20:56